செய்தி வெளியீடு எண்: 24 நாள்: 31.05.2019

***தேனி மாவட்டம்,***
***தேனி அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

தேனியில் செயல்பட்டு வரும் அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.05.2019) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தில் வருகை பதிவேட்டில் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை, வருகைபுரிந்த மருத்துவர்கள், விடுப்பில் உள்ள மருத்துவர்கள், சிறப்பு பிரிவு மருத்துவர்கள் குறித்தும், உள்நோயாளிகள் இருப்பு, சிகிச்சை அளிக்கப்படும் விதம், மருந்து, மாத்திரைகளின் இருப்பு, அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள், இரத்த வங்கியில் அவசர தேவைக்காக தேவையான அளவு இரத்தம் இருப்பு, அறுவை சிகிச்சை பிரிவில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி, உணவு தயாரிக்கும் கூடம், சுற்றுப்புற சூழல்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், அரசு மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தில் செயல்பட்டு வரும் மனநல பிரிவிற்கு சென்று, மனநலத்தால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள 12 நபர்களிடம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை, மருத்துவர்கள் ஆற்றுப்படுத்தும் முறை (Counseling), வழங்கப்பட்டு வரும் மருந்து, மாத்திரைகள், உணவு முறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது, தேனி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.ராஜேந்திரன், துணை முதல்வர் மரு.இளங்கோ, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.சரஸ்வதி, மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**